சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 13 புதன்கிழமை (29-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 3

விலை ரூபா 6-00

அன்பளிப்பு

# புலிகளின் கடும் தாக்குதல்களினால் முன்னேற முடியாது படை திணறல்

## எதிர்ப்புக்கு முகங்கொடுக்கும் சிக்கல் நிலையை ஒப்புக்கொள்கிறது

சாவகச்சேரி, நவம்பர். 29

நல்லூர். அரியாலை, கொழும்புத்துறை, கந்தர்மடம் உட்பட பல முனைகளில் இருந்த இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நேற்று மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்தியதால் — இராணுவம் தான் திட்டமிட்டவாறு முன்னேற முடியாமல், தடைப்பட்டு நின்று திணற நேர்ந்ததாக — களச் செய்திகள் தெரிவித்தன,


விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதலுக்குத் தாம் முகங்கொடுக்க நேர்ந்ததாக இராணுவ அதிகாரிகள் கொழும்பில் ஒப்புக் கொண்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

அரியாலை, கொழும்புத்துறை, நல்லூர், கந்தர்மடம் உட்பட பல பகுதிகளில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றுக் கடுஞ்சமர் மூண்டது.

அகோர ஷெல் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தியவாறு படையினர் பல்வேறு முனைகளில் முன்னேற முயன்றபோது இச்சமர் மூண்டது.

இராணுவம் முன்னேறும் வழிகளை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் நடத்திவரும் தாக்குதல்கள் இராணுவத்துக்கு பெரும் இழப்புகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன், மாவீரர் நாளான நேற்று முன்தினம் மாலை 6.05 மணிக்கு, யாழ். மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் பாசறை ஒன்றில் ஈகச் சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்திய வேளை எடுக்கப்பட்ட படம் இது.

## ஆசிரியர்கள் அறுவர் ஒரே சமயத்தில் மண்மீட்புப் போரில் இணைந்தனர்

### வடமராட்சி, வடமராட்சி கிழக்கில் நேற்று நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 29

வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் இருந்து ஆறு ஆசிரியர்கள் நேற்றைய தினம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு முழுமையாகத் தம்மை இணைத்துக் கொண்டனர்.

இந்த ஆசிரியர்களை நேற்று எமது செய்தியாளர்கள் சந்தித்தபோது அவர்கள் தெரிவித்ததாவது:-

சிங்களதேசம் ஒன்றுபட்டு எம்மை அழிப்பதற்காக நடத்துகின்ற இந்த அதர்ம யுத்தத்தில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கும், எங்கள் தாயகத்தை இந்த அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்காகவுமே நாம் இந்த மகிழ்ச்சியான முடிவை எடுத்தோம்.

சிங்கள அரசு எம்மீது தொடுத்துள்ள இந்தக் கோரமான யுத்தத்துக்கு ஆதரவாகப் பௌத்த மதத் தலைவர்கள், சிங்கள புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், சிங்கள மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒன்றுதிரண்டு செயற்படுகையில் நாம் எம்மைப் பாதுகாக்கின்ற தர்ம யுத்தத்தில் இணைந்துகொள்ளாமல் இருப்பது நியாயமில்லை என்

(6 ஆம் பக்கம் பார்கக)

## ஆஸ்திரேலியாவில் மாவீரர் தின நிகழ்வு

### 2 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்

சாவகச்சேரி, நவ. 29

தமிழீழ மாவீரர் தினம் இம்முறை வெளிநாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களால் மிகவும் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகள் உட்பட உலக நாடுகள் பலவற்றில் மாவீரர் தின நிகழ்வுகளில் அங்குள்ள ஈழத் தமிழர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியுள்ளனர்.

ஆஸ்திரேயாவின் மெல்போர்ண் நகரில் நடந்த மாவீரர் தின நிகழ்வில் சுமார் 2 ஆயிரம் ஈழத் தமிழர்கள் பங்குபற்றியதாத தகவல் கிடைத்திருக்கிறது.

700 மீற்றர் நீளமான மண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நாடாளுமன்றில் யாழ்ப்பாண நிலை குறித்து உறுப்பினர்கள் கவலை

யாழ். மக்களின் நிலைமை குறித்து இந்திய நாடாளுமன்ற மக்கள் அவையில் நேற்று உறுப்பினர்கள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்நாட்டு அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நிபந்தனை அற்ற பேச்சுக்கள் நடைபெறுவதற்கு ராஜீக நெருக்குதலை இந்திய அரசு ஏற்படுத்த வேண்டும். — என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி அங்கு தெரிவித்தார்.

அனைத்திந்திய அண்ணா தி. மு. க. உறுப்பினர் திரு. சுவாமிநாதன் பேசுகையில் இராணுவ நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வீடுகளை இழந்திருப்பதாகவும், பெரும் இன்னல்களை அனுபவிப்பதாகவும் தெரிவித்தார்.

அப்பாவித் தமிழ் மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர் நாராயணசாமி அங்கு கூறினார்.

பாதிக்கப்பட்டுள்ள யாழ். மக்களுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் இந்திய அரசு வழங்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் [illegible] தெரிவித்தார். (ஐ)

## வெள்ளை மாளிகை முன் ஈழத்தமிழர் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், நவ. 29

ஸ்ரீலங்கா அரச படையினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுள்ள இனப்படுகொலைகளைக் கண்டித்து அமெரிக்காவில் வெள்ளை மாளிகை முன்பாக கூடிய ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழ் மக்கள் மீதான வன்முறையை ஸ்ரீலங்கா அரசு நிறுத்தவேண்டும் என்ற கோஷம் எழுதப்பட்ட நீண்ட பதாகையை தாங்கியபடி நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

அரச படைகளின் படுகொலைகளைக் காட்டும் படங்களையும், தமிழீழ தேசியத் தலைவரின் படங்களையும் அவர்கள் கைகளில் வைத்திருந்தனர். (ஐ)

## வல்வையில் ஷெல் வீச்சு

வடமராட்சி, நவ. 29

வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களின் போது வல்வெட்டித்துறை சிவன் கோவில், வல்வைச் சந்தியிலுள்ள கடை ஒன்று, வீடுகள் என்பன பலத்த சேதத்துக்குள்ளாகின.

பலாலி முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு சுமார் 10 30 மணியவில் ஏவப்பட்ட ஷெல்கள் வல்வெட்டித்துறை சிவன் கோவில் வேம்படி, ஊரிக்காடு ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன.

சிவன் கோவிலில் இரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் அதன் வசந்தமண்டபம், மூலஸ்தானத்துக்கு அண்மையிலுள்ள கட்டடம் வேம்படியிலுள்ள வீடு ஒன்று ஊரிக்காட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையல்காரர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு சைவ / அசைவ உணவு தயாரிப்பதில் திறமையும் அனுபவமும் உள்ள சமையல் ஆள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நேரில் வரவும்.

முகவரி:

**உதயன் பணிமனை,**
பருத்தித்துறை வீதி,
சரசாலை தெற்கு.
(கனகம்புளியடிச் சந்திக்கு அருகாமையில்)

## தேடப்படுகின்றார்

உரும்பிராய் கிழக்கில் வசித்த
**தம்பிமுத்து சிவஞானம்**
என்பவரை தற்போது
''சிதம்பரம்'' மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி
என்ற முகவரியில் உள்ள
**மரகதவல்லி [மனோன்மணி] சிவஞானம்**
தேடுகிறார்.

தொடர்பு: செல்வி. நா. செல்லம்மா
கோட்டக் கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி.

[சி/3112]

## விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

தற்போது வட மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக விண்ணப்ப முடிவு திகதி 31 - 12 - 95 வரை பிற்போடப்பட்டுள்ளது.

விண்ணப்ப வயது: **18 முதல் 45 வரை ஆகும்**

கல்வித் தகைமைகள் தவிர்ந்த ஏனைய தகைமைகளைப் பிறிதொரு தாளில் எழுதி விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

சுந்தரம் டிவகலாலா
பணிப்பாளர்,
விளையாட்டுத்துறை.

கல்வி கலாசார விளையாட்டுத்
துறை அமைச்சின்
செயலாளருக்காக.

கல்வி கலாசார
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி-3111)

## தேடுகிறார்

90/4, நீராவியடியைச் சேர்ந்த
பரமேஸ்வரன் குடும்பத்தினர்
உசன் மிருசுவிலைச் சேர்ந்த
**விக்னேஸ்வரன் நல்லம்மாவுடன்**
தொடர்பு கொள்ளவும். (39303)

## தகரவாளி, மண்வெட்டி வழங்கல்

மண்வெட்டிகள், 8'' மூலாம் பூசப்பட்ட தகர வாளிகள் வழங்கக் கூடியவர்களை சாவகச்சேரி நகர சபையில் இயங்கும் யாழ். மாநகரசபையுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**யாழ். மாநகர ஆணையாளர்**

சாவகச்சேரி,
28 - 11 - 1995. [39302]

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மணியகாரன் ஒழுங்கையைச் சேர்ந்த முன்னாள் ஆசிரியரும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளருமாகிய

காலஞ்சென்ற

**எஸ். குமரேசன் அவர்களுக்கு**

எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விஜயபாலன் குடும்பத்தினர்
சாம்பவி ட்ரேட் சென்ரர்,
46, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(39408)

# கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்

### விடுதிகளை மீண்டும் திறப்பதில்லை என முடிவு

கொழும்பில் தற்போதுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று கொழும்பு பிரதேசத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் பி. பி. திஸ்நாயக்கா தெரிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள், தேடுதல் நடவடிக்கைகள் ஆகியன தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் உள்ள விடுதிகளும், வீடியோ நிலையங்களும் மீண்டும் திறக்கப்படும் என்று வெளியான அறிக்கை தவறானது என்றும் அவர் தெரிவித்தார்.

அவை இயங்க ஆரம்பித்தால் அவை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கொழும்பு செல்லும் தமிழர்களை பாடசாலைகளில் தங்கவைக்க முயற்சி

கொழும்பில் உள்ள விடுதிகள் யாவும் மூடப்பட்டுள்ளதால் பல்வேறு வேலைகள் காரணமாக கொழும்பு வரும் தமிழர்கள் தங்குவதற்கென ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்கு தனியாகவும் பாதுகாப்பான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

இதற்காக ஏதாவது ஒரு பாடசாலைக் கட்டடத்தை பாவிக்கலாம் என நினைக்கிறேன்.

இது தொடர்பாக 2 அல்லது 3 தினங்களில் நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்,

தம்மைச் சந்தித்த தமிழ்க் குழு ஒன்றிடமே அவர் இப்படித் தெரிவித்தார்.

## பள்ளி எழுந்திடுவீர்

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர்களும் அதிபர்களும் இணைந்து வழங்கும் ''பள்ளி எழுந்திடுவீர்'' என்னும் போராட்டக் கால நாடகம் வடமராட்சியின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நாடகத்தைப் பார்ப்பதற்காக பெருந்திரளான மக்கள் கூடுகின்றனர்.

நாடகம் ஆரம்பமாவதற்கு முன்னர் அது மேடையேற்றப்படும் இடங்களில் எல்லாம் தமிழீழ திரைப்படங்கள் பிரிவுப் பொறுப்பாளர் பகலவன் உரையாற்றுகிறார். (அ)

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக திருச்சியில் ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ. 29

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கு பாதுகாப்பும், உரிமைகளும் கிடைத்திட மத்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்று முன்தினம் திருச்சியில் 300 கன்னியாஸ்திரிகள் உட்பட சுமார் 500 குருமார்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

இவர்களது ஆர்ப்பாட்டப் பேரணியை கத்தோலிக்க ஆயர் கப்பிரியல் தொடக்கி வைத்தார். (இ)

# யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சி படுதோல்வியில் முடியும்

### சந்திரிகாவுக்கு சுவாமிகள் கடிதம்

வடமராட்சி, நவ. 26

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற உங்கள் அரசாங்கத்தின் விருப்பம் அர்த்தமற்ற ஒன்றாகும். அது உங்களுக்குப் பழிச் சொல்லை தரக்கூடிய படு தோல்வியாகவே முடியும்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அண்மையில் அனுப்பிய கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் அங்கு வாழ்ந்த மக்கள் எல்லோரும் இப்படி ஒரேயடியாக இடம்பெயர்ந்ததில்லை. இந்த இடம்பெயர்வின் ''பெருமை'' உங்களையே சாரும்.

இது போன்ற நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நாம் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படக் கூடாது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் இந்திய அமைதிப்படைக்கு நேர்ந்தது என்ன? வரலாறு மீண்டும் வருவதுண்டு என்பதனை மறந்துவிடக் கூடாது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோதும், இப்போது அவரது மனைவியும் மற்றும் பல முட்டாள் அரசியல்வாதிகளும், ராஜீவின் மரணத்துக்குக் காரணமாக இருந்தவர்களை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்க வேண்டும் என்று கூக்குரலிடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படை புரிந்த கொலைகளால் விதவைகளான பல எண்ணிக்கையான தமிழ் பெண்களின் நிலை குறித்து இந்தப் படித்த முட்டாள்கள் நினைத்தது உண்டா? இந்த விதவைகளின் அவலத்தை அவர்கள் சின்ன விடயமாகக் கருதுகிறார்களா?

[illegible] அதனையே அறுவடை செய்ய முடியும் என்று புத்தர் பெருமான் கூறுகிறார்.

முந்திய தலைவர்கள் எல்லோரும் தங்களால் இயன்றளவு எண்ணிக்கையான தமிழர்களைக் கொன்றார்கள். அவர்களை எல்லாம் நீங்கள் விஞ்சிவிட்டீர்கள்; தோற்கடித்து விட்டீர்கள். நான் இந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது கூட எங்களைச்சுற்றி எறிகணைகள் விழ்ந்தன. அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தப்போரை நிறுத்துவதற்கு இன்னும் காலம் பிந்தி விடவில்லை. போரை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை தொடங்குவதே சிறந்த வழி.

இவ்வாறு சுவாமிகள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ-173)

## மெசின் மைண்டர் தேவை

Hand Feeding Cylinder Machine இயக்குவதற்கு அனுபவமுள்ள மைண்டர் தேவை. விண்ணப்பிக்கவும்:-

விளம்பர இல. 502
**மே/பா. உதயன்,**
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

## இடமாற்றம்

யாழ். விக்ரோறியா வீதி, ஆஸ்பத்திரிக்கு
பின்புறமாக இயங்கிய

**இரத்தினம் வைன்டிங் வேக்ஸ்**

தற்பொழுது கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (39406)

## தேங்காய் எண்ணெய் தேவை

க. கனகராசா
மில்க்வைற்
மே/பா. பொ. இராசகுலசிங்கம்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(39410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மீதான தாக்குதலை தடுத்து நிறுத்தக்கோரி
# தமிழகத்தில் நாளை முழு அளவில் கடையடைப்பு

## தமிழக அரசும் ஆதரவு

சென்னை, நவ. 29

யாழ்ப்பாணம் மீதான ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் என்று கோரியும்—

யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி ஏதும் செய்யாமல் இருப்பதன் மூலம் அந்த இராணுவ நடவடிக்கைக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவிக்கும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவைக் கண்டித்தும்—

தமிழகத்தில் நாளை முழு அளவிலான கடையடைப்பு இடம் பெறவிருக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் ஏற்பாடு செய்துள்ள இந்த கடையடைப்புக்கு தமிழக அரசும் முழு ஆதரவு வழங்குவதாக அறிவித்திருப்பதால், இக் கடையடைப்பு பூரண வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழகத்தின் பிரதான கட்சிகள் இந்த கடையடைப்புக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால் நாளை தமிழகம் முற்றாக ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கடையடைப்புக்கு ஆதரவு வழங்கி அதில் பங்கு பற்றும்படி அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் தமிழக முதல்வருமான செல்வி ஜெயலலிதா, ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி, தமிழக காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், போட்டிக் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோரை தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் முன்னதாக கோரியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(4 ஆம் பக்கமும் பார்க்க)

(உ)

## சிப்பாய் பலி

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் ஆனையிறவுக்கு வடக்கே விடுதலைப் புலிகளுடன் மோதிக் கொண்டதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது. (ஐ)

## அம்பாறை பாதுகாப்பு கேள்விக் குறி

அம்பாறை மாவட்ட எல்லைக்கிராம பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது.

கூடுதல் பாதுகாப்பை உடனடியாக வழங்க அரசு முன்வரவேண்டும் என்று முன்னாள் அமைச்சரும், அம்பாறை மாவட்ட எம். பியுமான பி. தயாரத்ன தெரிவித்தார். (இ 3)

# ஏற்கனவே திட்டமிட்டபடி படையினரால் யாழ். நகரை கைப்பற்ற முடியவில்லை

## "சண்டே ரைம்ஸ்" பாதுகாப்பு செய்தியாளர் கூறுகிறார்

லண்டன், நவ. 29

ஸ்ரீலங்கா படைகள் திட்டமிட்டபடி யாழ். நகரைக் கைப்பற்ற முடியவில்லை இப்போதுள்ள நிலையில் புலிகளின் கடும் எதிர்ப்பால் படையினர் யாழ். நகரைக் கைப்பற்ற எத்தனை நாட்கள் செல்லும் என்று கூறமுடியாது.

இப்படிக் கூறினார் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ்.

பி. பி. ஸிக்கு திங்கள் இரவு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறினார்.

இப்போது இருக்கும் நிலையைப் பார்க்கும்போது—

படையினர் முன்னர் எதிர்பார்த்தபடி இன்னும் யாழ் நகருக்குள் போகவில்லை. அதற்கு முக்கிய காரணம், எதிர்பாராத முறையில் புலிகளிடம் இருந்து வந்த எதிர்ப்புத்தான்.

கடந்த இரண்டு மூன்று கிழமைகளாக அரசாங்கப் படை அதிகாரிகள் கூறியபடி பார்த்தால் இந்நேரம் படையினர் யாழ். நகருக்குள் பிரவேசித்திருக்கவேண்டும். என்றும் அவர் கூறினார்.

செய்தித் தணிக்கை காரணமாக யுத்த கள நிலைமை குறித்து சரியான தகவலை வெளியிடுவது சிரமமாக உள்ளது.

நம்பத்தகுந்த வட்டாரங்களின் தகவலின்படி இதுவரை 600 படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும், சுமார் 2 ஆயிரம் படையினர் காயமடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அவசரமாக தரைப் படைக்கு புதிதாகச் சேர்க்கப் படவுள்ள 10 ஆயிரம் பேர் புதிய படையணிகளை அமைப்பதற்காகவா அல்லது ஏற்கனவே படையணிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காகவா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆயினும் இந்த ஆட்சேர்ப்புக்கு வானொலி, தொலைக் காட்சி மூலம் அரசு பெரும் பிரசாரம் செய்து வருகிறது சிங்களம், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் மட்டுமே இதற்காக விளம்பரம் செய்யப்படுகிறது.

இதனால் தமிழர்கள் மத்தியில் இராணுவம் குறித்த நம்பிக்கை பாதிப்படைய வாய்ப்புண்டு.

கடந்த இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையைவிட தற்போது இராணுவத்தில் சேரும் ஆர்வம் மக்கள் மத்தியில் குறைந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினாலும் கூட தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் சிக்கல் உள்ளது.

தமிழர்கள் இராணுவத்தில் இருந்து அந்நியமாவதால் பிரச்சினை மேலும் மோசமாகும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-ஐ-3-6)

## கிளாலியூடாக செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கிளாலியூடாக வன்னிப் பகுதிக்குச் செல்லும் மக்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதால் பகல் இரவு படகுச்சேவை நடத்தப்பட்டு வருகிறது.

தினமும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கிளாலியிலிருந்து மறுகரைக்குச் செல்கின்றனர்.

வலிகாமம் பகுதி மக்களுடன் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி மக்களும் வன்னிக்குச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது (இ-117)

வடமராட்சியில்

## இடம்பெயர்ந்தோரின் வீடுகளில் பொருள் திருட்டு

வடமராட்சியில் இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் இருந்து பொருள்கள் திருடப் படுகின்றன.

தொடர்ச்சியான விமானத் தாக்குதல்கள் ஷெல் தாக்குதல்கள் காரணமாக பொலிகண்டிப் பகுதியில் பலர் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும்—

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளிலேயே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் மானாங்கனைப் பகுதியில் ஆட்டுக்கடா ஒன்றைத் திருடிச்சென்றவர்களை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்த சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளதாகக் கூறப் படுகிறது. (இ-80)

தென்மராட்சி வெதுப்பகங்களில்

## 52 ஆயிரம் இறாத்தல் பாண் தினமும் உற்பத்தி

தென்மராட்சி, நவ 29

தென்மராட்சிப் பகுதி பேக்கரிகளில் தினமும் 52 ஆயிரம் இறாத்தல் பாண் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன் வடமராட்சி கிழக்கு, வடமராட்சிப் பகுதிகளிலிருந்தும் தினமும் 10 ஆயிரம் இறாத்தல் பாண் தருவிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுவதாக யாழ். மாவட்ட பேக்கரிகள் சங்க பிரமுகர் ந. சற்குணராசா தெரிவித்தார்.

அதேசமயம் யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் நடமாடும் பாண் விநியோக சேவை ஒன்றை தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பித்துள்ளனர்

இவர்கள் வடமராட்சியிலிருந்து லொறி மூலம் பாணை எடுத்து வந்து தென்மராட்சியில் வைத்து ஆளுக்கு 4 இறாத்தல் பாண் வீதம் விநியோகம் செய்துவருகின்றனர். (இ-100-117)

## வீரனுக்கு ஒரு தடவை பாடை

நான் பிறந்த மண்
நான் வாழும் வீடு
எனது எல்லை
எனது சொத்து
என்ற வார்த்தை வழக்கிழந்து
ஊரே கலைந்து விட்டது.
ஊர் நாய்கள்
தன் இனத்தை உண்டு உயிர்வாழ்கின்றன
இன்னும் சில நாட்கள் மட்டுமே.
வால் ஆட்டி வரவேற்க
நாய் கூட இல்லாத நிலை.
எஞ்சியுள்ளது தன் மானம் ஒன்றே
தமிழ் மகனே
இதை இழந்தும் வாழ்வதா?
பூமிக்கு வாயிருந்தால்
இனி உன்னை வாழ அனுமதிக்காது.
தாயகத்தில் எதிரி கால் பதிக்கிறான்
உடைமைகளை சூறையாடுகிறான்
எஞ்சியதை சுட்டெரிக்கிறான்
சங்கிலி மன்னனின் வாசஸ்தலத்தில்
எதிரி சன்னதமாடுகிறான்
சம்பளத்திற்காக எல்லாம் நடக்கின்றன.
ஆனால் நாம்
மர நிழலில் வாழத்துடிக்கிறோம்.
இனி ஓடும் இடம் பற்றிச் சிந்திக்கிறோம்
வெளி நிலம் செல்ல பாஸ் கேட்கிறோம்
இந் [illegible]நிலை வேண்டாம்.
தன் [illegible]ானத் தமிழனே
பகைவ[illegible]ன விரட்ட நாம் வருகிறோம்
என பத்[illegible]ாயிரம் வரட்டும்
பார்த்திருக[illegible] பலாலியில்
புலிக் கொடி [illegible] ஏறும்
எதிரி களிப்பல[illegible]டயும் நிலைமாறி
நாம் கலைத்தடி[illegible]ப்போம்.
வீரனுக்கு
ஒரு தடவைதான் [illegible]பாடை!
சாட்டு வேண்டாம்
அராலியில் அழிந்த "[illegible]கொப்பே"க்கு
வயது அறுபது தான்
அவனுக்கும் ஓர் குடும்பம் [illegible] உண்டு
எதிரி இனத் துவேசத்துட[illegible]ன்
சண்டைக்கு வாறான் - நீ
தாயகத்தை காப்பாற்ற ச[illegible]ம் - வா.
இல்லையேல்
இறக்கும் வரை ஏதிலியாய்
ஓடிக் கொண்டே இருப்பாய்.
தாயே!
உன் மானம் காக்க
ஊர் விட்டு வந்தாய்
உன் தாயகத்தை காப்பாற்ற
என்ன செய்தாய்?
கணவனைக் கூப்பிடு
மகனை அழை
நெற்றியில் திலகமிடு
அனுப்பி விடு பாசறைக்கு.
வெற்றியுடன் மீள்வர்
இது சத்தியம்.

-சூ. துஷ்யந்தன்

# மூன்றாவது தரப்பு ஒன்று தலையிட்டு சமரசத்தை ஏற்படுத்த வேண்டும்

## சர்வதேச விழிப்பு இயக்கம் கோரிக்கை

அரசினதும் விடுதலைப்புலிகளினதும் அண்மைக்கால அறிவிப்புகளின்படி இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு சில நிபந்தனைகளுடன் தயாராக இருப்பது தெரிகிறது. எனவே இத்தருணத்தில் மூன்றாவது தரப்பு ஒன்று தலையிட்டு சமரசத்தை ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேச விழிப்பு இயக்கத்தின் செயலாளர் கலாநிதி குமார் ரூபசிங்கா இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையோ, அல்லது வேறு நாடுகளோ அல்லது தனி நபரோ இது விடயத்தில் தலையிட்டு மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வழியமைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேறு அரசினதோ, அமைப்பினதோ உதவி அத்தியாவசியமானது என்பதை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உணர வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையைவிட மோசமான இஸ்ரேல் — பலஸ்தீன பிரச்சினையில் நோர்வே அரசு ரகசியமான முறையில் ஓராண்டு காலமாக இருதரப்பாரிடையேயும் பேச்சு நடத்தி பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது.

எமது பிரச்சினையிலும் உதவி புரிய இத்தகையோர் விருப்பத்துடன் உள்ளனர். ஆயினும் சம்பந்தப்பட்டோரின் அழைப்பு இன்றி அவர்கள் தலையிட வாய்ப்பில்லை.

என்று குமார் ரூபசிங்க மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் போரை நிறுத்தி மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு எஞ்சியுள்ள ஒரே மார்க்கம் மூன்றாவது தரப்பு இதில் தலையிடுவதே ஆகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நீலன் திருச்செல்வமும் கூறியிருக்கிறார்.

அந்த மூன்றாவது தரப்பு உள்நாட்டைச் சேர்ந்ததாகவோ, வெளிநாடுகளைச் சேர்ந்ததாகவோ இருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபையாகவோ பொதுநலவாய நாடுகளாகவோ கூட இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [இ-ஐ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### பெற்றுக்கொள்ளவும்

எங்களிடம் திருத்துவதற்கு தந்த தையல் இயந்திரங்களை 20-12-95 இற்கு முன பெற்றுக் கொள்ளவும். சகல விதமான தையல் இயந்திரம் திருத்துநரும் உதிரிப்பாக விற்பனையாளரும் கௌசி தொழிலகம் வீரபத்திரர் கோவிலடி, கச்சாய்றோட்.
(39294)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி. தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலைய கேரதீவு பாதையில் கோயிலாக்கண்டி (ஆசிரியர்) பத்மநாதன் இல்லத்தில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றது.
டாக்டர் S. திருக்குமாரன்
(39404)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

28-11-95 அன்று ஒரு தொகைப் பணம் புத்தூர் சந்திக்கும் மீசாலைக்கும் இடையில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தா. மகேஸ்வரன் மணல் வீதி, மட்டுவில், தெற்கு, சாவகச்சேரி.
(39299)

### மாறிய பொருள்

17-11-95 அன்று தமிழீழ போக்குவரத்து கழக பஸ்ஸில் வரும் போது வேறொருவரின் சொப்பிங் பாக் பொருள்களுடன் எங்களிடம் மாறி வந்துவிட்டது உரியவர்கள் ம. ஆரோக்கியநாதர். மிருசுவில் வடக்கு, மிருசுவில் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.
(39300)

# படையினர் முன்னேற்றம் மெதுவாகவே நடக்கிறது

## திங்களன்று கோட்டைப் பகுதியில் குண்டு வீச்சு

கொழும்பு, நவ. 29

பாதுகாப்பரண்களில் இருந்து புலிகள் நடத்திவரும் கடுமையான தாக்குதல்கள் காரணமாக யாழ் நகரின் மையப்பகுதியை நோக்கிய படையினரின் முன்னேற்றம் மிகவும் மெதுவாகவே நடைபெறுவதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் தெரிவிதுள்ளார்.

மேற்கில் சிவியா தெருவில் இருந்தும் வடக்கில் சுண்டிக் குளியில் இருந்தும் நகரின் மையப்பகுதியை நோக்கி படையினர் முன்னேறுவதாகவும் அவர் கூறினார்.

அரியாலை தெற்குப் பகுதியையும் நல்லூர் கந்தசாமி கோயில் பகுதியையும் கண்ணிகளை அகற்றி படையினர் துப்புரவு செய்து விட்டனர் என்றும்—

திங்கட்கிழமை யாழ்பாணக் கோட்டைக்கு வட மேற்கே ஸ்ரீலங்கா விமானப்படை விமானம் குண்டு வீச்சு நடத்தியது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# படையினர் மேலதிக உதவி கோருகின்றனர்

சிங்கப்பூர், நவ. 28

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் ஸ்ரீலங்கா படைகள் மேலதிக படையை அனுப்புமாறு கொழும்பில் உயர் மட்டத்தை கோரியுள்ளன என்று சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளதாகவும் —

அவர்களின் எதிர்ப்பு அதிகரித்துள்ளதாகவும் —

மேலதிக படையை உடன் களத்துக்கு அனுப்புமாறும் — வடக்கில் உள்ள படைகள் கோரியுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## பாண்டிச்சேரி அ.தி.மு.கவும் ஆதரவு

சென்னை, நவ. 29

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக நாளை தமிழ்நாட்டில் நடைபெற உள்ள கடை அடைப்புக்கு பாண்டிச்சேரி அனைத்திந்திய அண்ணா தி.மு.கவும் ஆதரவு தெரிவித்துள்ளது.

பாண்டிச்சேரி முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு க. செயலாளருமான டி. இராமச்சந்திரன் இது தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (இ)

## குழந்தைகளுக்கு பால் மா

செம்பியன்பற்று நவ. 29

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து செம்பியன் பற்றில் உள்ள நலனோம்பு நிலையத்தில் தங்கி உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு செம்பியன்பற்று பங்குத் தந்தை யாவீஸ் அடிகளார் பால் மாவை வழங்கியுள்ளார். (இ-36)

## காரைநகர் ப. நோ. கூ. சங்க கிளை

கச்சாய், நவ. 29

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து கச்சாய் பகுதியில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான காரைநகர் மக்களின் நன்மை கருதி காரைநகர் ப. நோ. கூ. சங்கம் அதன் 3 ஆம் இலக்க கிளையை கச்சாய் அம்மன் கோவிலுக்கு சமீபமாக திறந்துள்ளது.
(இ 100)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உதவி

எழுது மட்டுவாள், நவ. 29

எழுதுமட்டுவாள் தெற்கு, எழுது மட்டுவாள் வடக்கு கிரமசேவையாளர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள ஏழு இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் முகாம்களில் தங்கியுள்ள ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு புளுக்கொடியல், தேங்காய், சீனி கலந்த ஜீவாகாரம் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதி மக்களின் தேவைக்கென மூன்று குழாய்க்கிணறுகளையும் 10 மலசல கூடங்களையும் இந்த நிறுவனம் [illegible] கொடுக்க உள்ளது.
(ஐ-152)

## உடன் தொடர்பு கொள்ளவும்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை நாவல்லையில் வசித்த

திருமதி குணசிங்கம் சந்திரா [சிவகாமசுந்தரி]

உடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி தவயோகராஜா சிவகாமசுந்தரி
கங்காணியார் முருகன் கோவிலடி,
மீசாலை. [39403]

## ★ ஸ்ருடியோ ஜனனி ★

யாழ். வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்தில் உங்களுக்குத் தேவையான கறுப்பு, வெள்ளை புகைப்படங்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும், சிறிய படங்களைப் பெரிதாக்கிக் கொள்ளவும், (10X12), மங்களகரமான நிகழ்ச்சிகளை கலர்ப் படங்களாகவும், நவீன முறையில் வீடியோ நிழற்படங்களாகவும் பிடித்து மகிழ்ந்திடவும் நாட வேண்டிய இடம்.

**ஜனனி படப்பிடிப்புக் கலையகம்**
யாழ். வீதி, சாவகச்சேரி.
(39295)

## நினைவு கூருகிறோம்



தோற்றம்: 17 — 10 — 1968

மறைவு: 28 — 11 — 1987

**லெப். வின்சன்**
**கங்காதரம் மகிழ்நன்**

திதி; 29 — 11 — 1995

ஆண்டுமோ டெட்டு ஆயது எனினும்
அனைந்தில துன்நினை வெம்முள்
மீண்டு நீ பிறக்கும் வினைப்பயன் உளதேல்
மீள்க நம் கொடியினில் வலிதாய்
ஆண்டவிம் மினத்தார் மீண்டொரு கொடிக்கீழ்
அணிபெற நிமிர் நடை பயிலல்
காண்டிடல் வேண்டி, கண்ணுளே துலங்கும்
கவினுறு இன் மொழி மறவா.

குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. [39407]

கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள் சபையின்

விசுவாசிகள் அனைவருக்குமான விசேஷ கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திகதி: 30-11-1995 வியாழக்கிழமை
நேரம்: காலை 9-00 மணி
இடம்: தேவ சபை [A.O.G.],
கண்டி வீதி சாவகச்சேரி
[அரசினர் வைத்தியசாலையின் அருகில்]

அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

போதகர்: ஜே. அகஸ்ரின்

[39297]

## தொடர்பு கொள்ளவும்

உடுவிலைச் சேர்ந்த சரோ சத்தியானந்தன் 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனரத்தினத்தையும், யாழ். மாநகர சபை கணக்கியல் பிரிவைச் சேர்ந்த பொன்னம்பலத்தையும் தேடுகிறார். தொடர்பு கொள்ளவும். மே/பா, திருமதி பரம் தணிகாசலம், (ஆசிரியை) 'தணி' கரவெட்டி கிழக்கு, கரவெட்டி (கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை அருகே).
(39405)

இ. இராசேந்திரம் — P. H. I.

## உடன் சந்திக்கவும்

முக்கிய விடயமாக A. காசிநாதர் P. H. I. என்பவரை C/o சின்னத்தம்பி ஓய்வுபெற்ற அதிபர், மந்துவில், [வேம்பிராய் சந்திக்கு அண்மையில்] என்னும் விலாசத்தில் உடன் சந்திக்கவும்.

வீ. முத்துலிங்கம்
C/o. விக்னேஸ்வரன் [Banker]
வாகியடி கிழக்கு,
மட்டுவில் தெற்கு.

(39298)

## கூரைத் தகரங் ள் விற்பனைக்கு

பாவிக்காத புதிய கூரைத் தகரங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல. 501
C/o உதயன் பணிமனை
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

[ஈ-101]

## உடன் சந்திக்கவும்

பாலேந்திரன் மீனாம்பிகையையும்
பிள்ளைகளான
ஜென்னி, நர்திகுமார், இந்திராகாந்தி, தயாநந்தி
ஆகியோரையும் கணவர் தேடுகின்றார்.

பின்வரும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்

ப. பாலசுப்பிரமணியம்
மீசாலை கிழக்கு, மீசாலை.

[39293]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் உணவு விநியோகத்துக்கு புது திட்டம் நடைமுறைக்கு

சாவகச்சேரி, நவ. 29

அரசு அனுப்பும் உலர் உணவை இடம்பெயர்ந்தவர்களுக்கும், இடம்பெயராதவர்களுக்கும் வழங்கும் வகையில் புதிய திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அரசு அனுப்பும் உணவை சகலருக்கும் பங்கீடு செய்யும் வகையில் அறிமுகம் செய்யப் படவுள்ள இந்த புதிய திட்டம் வருமாறு:-

★ இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு வழங்கவென ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த உலர் உணவு முத்திரைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

★ புதிய உலர் உணவு முத்திரை வழங்குவதற்கான படிவங்களை விநியோகம் செய்யும் வேலைகள் தாமதமாகுமாதலால், இடம்பெயர்ந்தவர்கள் அனைவருக்கும் ''உ'', ''இ'' உணவு அட்டைகள் பிரதேச செயலர்களால் உடன் வழங்கப்படும். இதன் காரணமாக ஏற்கனவே அமுலில் இருந்த ''உ'', ''இ'' அட்டைகள் இம்மாதத்துடன் ரத்துச் செய்யப்படுகின்றன.

★ புதிய ''இ'', ''உ'' அட்டைகள் பிரதேச செயலர்களாலும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவைப் பொறுத்தவரையில் ஐந்து வலயங்களையும் சேர்ந்த மேலதிக உதவி அரசாங்க அதிபரினாலும் வழங்கப்படும். இந்த விநியோகம் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு இவ்வாரத்தில் முடிக்கப்படும்.

★ இந்த புதிய அட்டைக்கான பதிவுகள் நிரந்தர கிராமசேவையாளரின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்படும்.

★ உலர் உணவு அட்டையில் நலனோம்பு நிலையங்களைப் பொறுத்தவரையில் அந்நிலையத்துக்குப் பொறுப்பான கிராமசேவை உத்தியோகத்தரும், நலனோம்பு நிலையத்துக்கு வெளியே உள்ளவர்கள் விடயத்தில் மேலதிக கிராமசேவையாளரும் ஒப்பமிடுவர்.

★ புதிய உலர் உணவு அட்டை வழங்கும் போது பழைய உலர் உணவு அட்டை மீளப் பெறப்பட வேண்டும்.

★ பழைய உலர் உணவு அட்டையை சமர்ப்பிக்காதவர் விடயத்தில், அவர்களிடம் உள்ள ஆவணங்களை ஆராய்ந்து விசாரணை மூலம் திருப்திப்பட்டு புதிய உலர் உணவு அட்டை விநியோகிக்கப்படும்.

(இ-3)

## நிவாரண பொருள்களுடன் கல்யாணி வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 29

இடம்பெயர்ந்தோருக்கான ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களுடன் 'லங்கா கல்யாணி'' கப்பல் இவ்வார இறுதியில் பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

ஒரு தொகுதி சீனி, பருப்பு மற்றும் கடலை, பயறு, லக்ஸ்பிறே பால் மா பக்கட்டுகள் என்பன இக்கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

இக்கப்பல் கொழும்பில் இருந்து இன்று புறப்பட இருந்ததாக யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

நீண்டகால இடைவெளியின் பின் கொழும்பில் இருந்து நிவாரண உணவுப் பொருள்கள் யாழ். மாவட்டத்துக்கு கப்பலில் எடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இடம்பெயர்ந்த மாணவர் அடையாள அட்டைகள்

### செயலகத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த —

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த — 600 க்கு மேற்பட்ட மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் செயலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட உள்ளன.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் நேரடியாக செயலகத்துக்கு வந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த பின்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் செயலகத்தில் உள்ளன.

அந்தப் பாடசாலைகள் வருமாறு:-

கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, சென் மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம். அருணோதயா கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம். ஏழாலை மகா வித்தியாலயம், நல்லூர் மேற்கு விக்னேஸ்வரா, மானிப்பாய் மெமோரியல் மகளிர் கல்லூரி, சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர். வாதரவத்தை விக்கினேஸ்வரா, விக்டோரியா கல்லூரி, வைத்தீஸ்வரா கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். யாழ். மத்திய கல்லூரி, சம்பத்திரசிரியர் கல்லூரி, யாழ்ப்பாணம். நாவலர் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்.

(இ)

## யாழ். பிரதம தபாலக கடிதங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். பிரதம தபாலகத்துக்கு உட்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான தபால் விநியோகம் இன்று முதல் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று முற்பகல் 10 மணி முதல் இந்த விநியோகம் இடம்பெறும்.

'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட இந்த தபால்கள் கடந்த மூன்று நாள்களாகத் தரம் பிரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இன்று முதல் தொடர்ந்து கடிதங்கள் விநியோகிக்கப்பட இருப்பதால் அனைவரும் தபால்களைப் பெற்றுக் கொள்ள ஒரேசமயத்தில் தபாலகத்துக்கு வர[illegible] என்று தபால் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை— ஏனைய தபால் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான தபால்கள், அந்தந்த பிரிவு தபாலகங்கள் தற்போது இயங்கும் இடங்களில் வைத்து விநியோகிக்கப்படும்.

யாழ். பிரதம தபாலகத்துக்கு உட்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான தபால்கள் நேற்று முதல் விநியோகிக்கப்படும் என்று நேற்றைய பத்திரிகையில் வெளியான செய்தியை அடுத்து பெரும் எண்ணிக்கையானோர் நேற்று சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு வந்திருந்தனர்.

எனினும் தபால்களை தரம் பிரிக்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாததாலேயே நேற்று தபால் விநியோகம் சாத்தியப்படவில்லை என்றும் — இன்று முதல் அவை விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ)

## உதயன்

### தவிர்க்க முடியாதது

தமிழர்களின் இன்றைய அரசியல் நிலைமை, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, சந்திரிகாவின் அரசியல் இராணுவ நோக்கங்கள், தமிழர்களின் அவசர கடமை. —இவை குறித்து மிக விரிவாகவும் விளக்கமாகவும் தமது மாவீரர் நாள் உரையில் எடுத்துச் சொல்லியுள்ளார், தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

ஆக்கிரமிப்பின் மூலம் தமிழர்களை இனப்படுகொலை செய்து அழித்து, இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று, குறைந்த பட்சத்தீர்வு ஒன்றைத் தமிழ் மக்கள் மீது திணித்துவிடவே சந்திரிகா அரசு நினைக்கிறது என்ற உண்மையைத் தலைவர் தமது உரையில் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பொருள் வளத்தைச் சிதைத்து, பண்பாட்டுச் சின்னங்களை அழித்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சீர்குலைத்துவிடும் அடிப்படை நோக்கத்துடனேயே யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பு நடத்தப்பட்டுள்ளது என்பதனையும் தலைவர் தெளிவாக்கியுள்ளார்.

யாழ். நகரையும் வலிகாமத்தையும் இராணுவம் முற்றுகையிடுவதற்கு முன்னராக மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்த வரலாற்று நிகழ்வு, சந்திரிகா அரசின் தந்திரோபாயத்துக்குச் சாவுமணி அடித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

யாழ்ப்பாண மண்ணைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்து, துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் ஒருபோதும் பங்குபற்றப் போவதில்லை— என்று தமது இயக்கத்தின் நிலைப்பாட்டை மிகத்தெட்டத் தெளிவாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லியுள்ளார்.

இத்தகைய ஓர் அரசியல் சூழ்நிலையில், தமிழர்கள் தமது படை பலத்தைப் பெருக்கி, போராட்டத்தைத் தீவிரமாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர் சரியாக வலியுறுத்தி உள்ளார்.

போராடித்தான் வாழ வேண்டும் என்ற நிலைக்குத் தமிழ்த்தேசம் தள்ளப்பட்டிருக்கிறது. இந்தச் தேசியப் பணியிலிருந்து, வரலாற்றின் அழைப்பிலிருந்து தமிழ் இளம் பரம்பரை ஒதுங்கிக்கொள்ள முடியாது. இதில் காலம் தாமதிப்பதும் இனத்துக்குப் பேராபத்தை விளைவிக்கக்கூடும் என்பதனையும் தேசியத் தலைவர் உணர்த்தியுள்ளார்.

வரலாற்றின் மிக நெருக்கடியான இக்காலகட்டத்தில் இருந்து மீண்டும் தமிழர்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ வேண்டுமானால் — இளைஞர் சந்ததி தமக்குள்ள கடமையை சுயமாகவே உணர்ந்து கொள்வது அவசியம்.

தமிழர்கள் போரைத் தாமக விரும்பித் தேர்ந்து எடுக்கவில்லை. தமக்குச் சுதந்திரம் வேண்டும் என்பதே அவர்களின் அபிலாசை. அதற்காகச் சிங்கள அரசுகள் தமிழர்கள் மீது போரைத் திணித்துள்ளன.

எனவே தமிழர்களின் அபிலாசை கைகூடுவதற்கு போராட்டம் தவிர்க்க முடியாததாகிறது. தமிழ் இளைஞர்கள் அதில் மனமொன்றிப் பங்குகொள்பது அவசியமாகிறது.

## ஊர் முற்றம்

வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த இரண்டு நண்பர்கள், இங்கு வந்த பின்னர் முதற்தடவையாகச் சந்திக்கிறார்கள்

புதிய முறையிலான குசலம் விசாரிப்பு ஆரம்பமாகியது.

என்ன, எப்ப வந்தனீர்? முப்பதாம் திகதியே நடக்கத் தொடங்கிவிட்டீரோ... அல்லது பிறகோ...?

நாங்கள் இரண்டாம் நாள், அதுதான் செவ்வாய்க்கிழமை இரவு தான் புறப்பட்டோம்... இது இரண்டாமவர்.

வீட்டுச் சாமான்கள் ஏதாவது கொண்டுவந்தீரோ... அல்லது சூட்கேசும் உரபாக்குகளும் தானோ...?

நீர் சொன்ன ரகம் தான். அந்த நேரத்திலை கையும் ஓடயில்லை, காலும் ஓடயில்லை. சாமானைப்பற்றி யார் நினைச்சது. இரண்டு மூண்டு கிழமையுக்குள்ளை, ஆககக்கூடினது ஒரு மாதத்திலை திரும்பப் போகலாம் எண்டு என்னைப்போலத் தானே பலரும் நினைச்சிருக்கினம்...

ஓமோம்... குந்தி இருக்க, ஒண்டிஇருக்க இடமிருக்குமோ எண்டு தெரியாத நிலையிலை வீட்டுச் சாமானைப்பற்றி எப்படி நினைக்க முடியும்...?

சரி, உந்தக் கதையளை எல்லாம் விடும்.... இப்ப எல்லாம் பழைய கதையளாகிப் போச்சு. சனம் புதிய சூழ்நிலைக்குப் பழக்கப்பட்டுவிட்டுதுகள்...

உண்மைதான் எங்களது மக்கள் புதிய சூழலுக்குத் தங்களை மாற்றிக்கொள்வதில் — இசைவாக்கப்படுத்துவதில் — கெட்டிக்காரர்கள் தானே. என்னத்தையும் சமாளிக்கும் சக்தி அவையிட்டை அபாரம்...

ஆரம்பத்தில் ஆழமாக யோசிக்காமல் ஏசுங்கள்; பேசுங்கள்; திட்டுங்கள்; அழுதும் புலம்புங்கள்... அடுத்த சில நாட்களுக்குப் புறுபுறுக்குங்கள்...

கிழமைகள், மாதங்கள் செல்லச் செல்ல மறந்துவிடுங்கள். இது தெரிந்த விஷயம் தானே...

எண்டாலும் இராணுவத்தைப் பெடியன்கள் கெதியா அடித்துத் துரத்துவான்கள்.. அதுக்குப் பிறகுதான் யாழ்ப்பாணம் போறது. அதுவரைக்கும் என்ன கஷ்டப்பட்டாலும் இந்தப் பக்கத்திலேயே இருக்கிறதெண்ட எண்ணம் எங்கடை சனத்துக்கு இப்ப வந்துவிட்டுது — இது முதலாமவரின் அவதானிப்பு.

★ ★ ★

அந்த இருவரின் உரையாடல்களும், அவர்கள் வெளியிட்ட தகவல்களும் கருத்துக்களும் மூன்றமவராகச் சற்றுத் தொலைவில் நின்று மௌனமாகக் கேட்டுக் கொண்டு நின்ற என்னைச் சிந்திக்கத் தூண்டின.

யாழ்ப்பாணம் திரும்ப வேண்டும் என்ற ஆசை ஆவல் மக்களிடம் இருப்பது உண்மை தான். அது ஒவ்வாத ஆசை என்பதும் அல்ல. இயற்கையானது நியாயமானதும்தானே!

ஆனால் இராணுவம் நிற்கும் வரைக்கும் யாழ்ப்பாணம் போகக் கூடாது என்பதில் மக்கள் உறுதியாக இருப்பதைக் கேட்க, அறியப் பெருமையாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும், மக்களை அங்கு வருமாறு சந்திரிகா கேட்பார் என்று எதிர்பார்த்தது போலவே அவர் கேட்டுவிட்டார். ஆனால் தனக்கு வெற்றி நிச்சயமாகு முன்னரே அவர் அவசரப்படுகிறார்.

சும்மா சொல்லக் கூடாது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வெற்றியைக் கொண்டாடுவதற்கு தெற்கில் அரசாங்க ஆதரவாளர்களும், சிங்களப் பேரினவாதிகளும் வாங்கி வைத்த பட்டாசுகளும் இப்போது சுக்கல் வெடிகளாகிப் போயிருக்கும்!

அது ஒருபுறமிருக்க...

யாழ்ப்பாணத்துக்கு வாருங்கோ என்று சந்திரிகா செங்கம்பளம் விரித்துக்கூடத் தமிழர்களை அழைக்கலாம்.

யாழ்ப்பாண நகரத்தைப் பிடித்ததும் அங்கு சிவில் நிர்வாகம் நடத்தப்படும் என்று அனுருத்த ஓலம் வைத்திருக்கிறார்.

அரசாங்கம் என்ன சொன்னாலும், செய்தாலும் அங்கு போவதற்கு என்ன அவசரம்? இப்போது ஆசை வார்த்தை பேசிக் கூட்பிடுவார்கள். ஒரு மாதம் செல்ல சோதனை, சுற்றிவளைப்பு என்று கூறி இளைஞர், யுவதிகளைப் பிடித்துக் கொண்டு சென்று புலிச் சந்தேக நபர்கள் என்று முத்திரை குத்தி, சுட்டுப் போட்டு குவியலாக எரிப்பார்கள் புலிகளை பூண்டோடு அழித்து விட்டதாகக் ''கணக்குக்'' காட்டுவார்கள்.

அது மட்டுமன்றி, விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்களில் தங்களுக்கு இழப்பு உண்டாகும் போதெல்லாம், வீதியால் போகும், வீட்டில் இருக்கும் வயது வந்தவர்களையும் சுட்டுப் பொசுக்குவார்கள்.

இவற்றை அறிந்து தான் மக்கள் யாழ்ப்பாணத்துக்குள்ளே போகக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

உண்மையும் அதுவே. ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனத்தில் சூடு கண்ட பூனைகளல்லவா, தமிழர்கள்?

— மயூரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்திரேலியாவில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டபம் ஒன்றில் எழுநூற்றுக்கு மேற்பட்ட மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டு மிகவும் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

முதலில் தமிழீழத் தேசியத் கொடி ஏற்றப்பட்டது. னர் ஆஸ்திரேலிய நாட்டுக் கொடி ஏற்றப்பட்டது. பின் விசேட கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெற்றன.

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தி வருவதாக களச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்பாராத விதமாக இராணுவம் எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். நகரப் பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளையும், கட்டடங்களில் வைக்கப்பட்டிருந்த பொறி வெடிகளையும் போர் டாங்கிகள் மூலம் அழித்தவாறு படையினர் நகரின் மையப் பகுதியை நோக்கி நகர முயன்றனர்.

நகரை நோக்கிச் செல்லும் இராணுவ அணிகள் எதிர்ப்பை சந்திக்கின்றன என்பதை இராணுவம் ஒப்புக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு அரச துருப்புக்கள் எதிர்பார்த்ததற்கு அதிக காலம் பிடிக்கும் என்றும் — விடுதலைப் புலிகள் விட்டுச் சென்ற நிலக் கண்ணிகளும் இந்த கால தாமதத்துக்கு ஒரு காரணம் என்றும் அவதாணிகள் தெரிவித்தனர்.

# இறுதி வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

சாவகச்சேரி, நவ. 29

வலிகாமம் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் நேற்று வீரச்சாவடைந்த வீரவேங்கை கௌசிகனின் (கந்தக்குட்டி சிவநாதன் — மட்டக்களப்பு, த. மு:- புகையிரத வீதி, கொக்குவில்) வித்துடல் இன்று மாலை 3 மணி வரை தென்மராட்சி கோட்ட மாவீரர் பணிமனையில் பெற்றோரின் வருகைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பின்னர் வித்துடல் வரணி மகாவித்தியாலயத்தில் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்பட்ட பின்னர் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு புனித விதைகுழியில் விதைக்கப்படும். (ஐ)

## வல்வையில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிலுள்ள சில வீடுகள் என்பன சேதமடைந்தன.

நேற்று அதிகாலை 4 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் வல்வைச் சந்தியில் உள்ள கடை ஒன்று சேதமடைந்தது. (இ-173)

## ஆசிரியர்கள் அறுவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதை உணர்ந்துள்ளோம்.

இதுவரை காலமும் எங்கள் தேசியப்படையின் பாதுகாப்பில் வாழ்ந்துவந்த நாங்கள் அப்படையின் ஆட்பலத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம்.

### பாதுகாப்பு இல்லாத நிலையில் கல்வி ஏன்?

இன்று சிலர் நீங்கள் போராட்டத்தில் இணைவதனால் மாணவர்களின் கல்வி எதிர்காலத்தில் பாதிக்கப்படுமெனக் கேட்கக்கூடும். எமது உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத இன்றைய நிலையில் கல்வி பற்றிச் சிந்திப்பது பொருத்தமாகாது என நினைக்கின்றோம்.

சிங்கள அரசைப் பொறுத்தவரை மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற பேதம் இருக்காது சகட்டுமேனிக்குத் தமிழர்கள் என்றால் அவர்களை அழிக்க வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் எமது பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களையும், அத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட எமது மாணவச் செல்வங்களையும் கவனத்தில் கொள்ளுதல் பொருத்தமானது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றபோது பல்வேறு இலட்சியக் கனவுகளைத் தமது நெஞ்சங்களிலே சுமந்து கொள்கின்றார்கள். அந்த இலட்சியக் கனவுகளுடன் ஆசிரியர் சமூகத்தினராகிய நாங்களும் பல எதிர்பார்ப்புக்களுடனேயே மாணவர்களுக்குக் கல்வி போதிக்கின்றோம்.

ஆனால் எண்ணங்கள் நிறைவேற முன்பாகப் பல மாணவர்களும், ஆசிரியர்களும் விமானக் குண்டு வீச்சுக்களாலும், எறிகணைத் தாக்குதல்களாலும் கொல்லப்படுகின்ற அவலநிலை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளை அரசு மூடிவிட்டுப் பாதுகாப்புக் காரணங்களினாலேயே பாடசாலைகள் மூடப்பட்டதாகப் பிரசாரம் செய்கின்றது. உண்மை நிலை அதுவல்ல. தென்னிலங்கையில் இருக்கின்ற பாடசாலை மாணவர்களைப் படைதிரட்டி எம்மீது போர் தொடுப்பதற்காகவே.

இந்நிலையில் அரசு இனி எப்போது பாடசாலைகளைத் திறக்கும்? நாம் எப்போ கல்வி கற்பிப்போம்? என எதிர்பார்த்து நிற்க முடியாது.

இன்றுள்ள தலையாய பிரச்சினை எமது உயிரைப் பாதுகாப்பதற்காக நாம் போராடுவதே. எனவே தமிழீழத்தின் தன்னிகரில்லாத் தலைவன் திரு. வே. பிரபாகரன் அவர்களின் வழிநடத்தலை ஏற்று இந்தத் தேசத்தின் விடிவுக்காகப் போராடுவோம் என்ற முடிவை எடுத்துள்ளோம்.

இப்படி அவர்கள் தெரிவித்தனர். (இ)

# மரண அறிவித்தல்

## சானைக்குட்டி பாணுவதி

[ஆத்தைப்பிள்ளை]

மாவிட்டபுரம், கீரிமலை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கைதடி நுணாவிலில் வசித்தவருமாகிய சானைக்குட்டி பாணுவதி [ஆத்தைப் பிள்ளை] 27-11-95 காலமாகிவிட்டார்.

இவர் சானைக்குட்டியின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் [மாவீரர் - ராம்], ஜெயபாலசிங்கம் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), தவபாலசிங்கம், குணபாலசிங்கம் (ஜேர்மனி), யோகபாலசிங்கம், சறோஜினி தேவி, ரஞ்சினிதேவி, மாலினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. கந்தசாமி, சி. கந்தசாமி, ஜெ. புஸ்பராணி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29 - 11 - 95) காலை 10 மணியளவில் அன்னாரது தற்போதைய இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. யோகன்
[மகன்]

தற்போதைய முகவரி:
சிவமலர் வீதி,
கைதடி, நுணாவில்.

[39412]

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை இராசநாயகம்

[முன்னைநாள் யாழ். ஜவர்ஜி பிறதர்ஸ் நிறுவன முகாமையாளரும், தெல்லிப்பளை ரங்நநாதன் கடை கணக்காளரும்]

முல்லாத்தனை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், 32, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசநாயகம் 28-11-1995 செவ்வாய் இரவு காலமானார்.

இவர் காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகம்மாவின் அன்பு மகனும், பராசக்தியின் அன்புக் கணவரும் ஸ்கந்தகுமார் (உதயன்), ராஜ்குமார் (கொழும்பு), றஜனி (கனடா), சுகந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு தந்தையும், மேகலா (ஆசிரியை, வீமன்காமம் மகாவித்தியாலயம்), அமலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் லஜீனரூபிகா, ஆமிர்ந்தா ஆகியோரின் பேரனும், ஞானபூரணம் (கொழும்புத்துறை), செல்வநாயகம் (வடலியடைப்பு), காலம் சென்றவர்களான விஜயரட்ணம், சுப்பிரமணியம், மணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் இடம்பெயர்ந்திருக்கும் புலோலி தெற்கில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
ஸ்கந்தகுமார்
(மகன்)

மே/பா. வி. சண்முகநாதன்,
''றஜனி இல்லம்'',
புலோலி தெற்கு.
(விஜயா அரைக்கும் ஆலை எதிர் ஒழுங்கையில் ஆதவன் கடைக்கு அருகில்)

(சி/3113)

## திருமதி செல்லம் சின்னத்தம்பி

கருகம்பனை வத்தவானப்புலம் நரசிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், வயாவிளான் வயிரவப்பிள்ளை சின்னத்தம்பியின் அன்பு மனைவியுமான செல்லம் 27 - 11 - 95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பு, இராசையா, நடராசா, செல்லத்துரை (ஆசிரியர்), பொன்னுத்துரை (ஆசிரியர்), பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், நாகேந்திரம், பாலசிங்கம், சரஸ்வதி அம்மா (ஆசிரியை), மனோன்மணி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும், இராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்) லலிதாம்பிகை, நகுலாசலபதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகரனின் பெரியம்மாவும், சுமதி (கனடா), நாவலன் (கனடா), அகிலன், சபேசன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாவும் மந்துவில் உடையார் வளவில் நடைபெற்று பூதவுடல் மந்துவில் குடும்ப மயானத்தில் 28 - 11 - 95 இல் தகனம் செய்யப்பட்டது என்பதனை உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தகவல்:
ந. பொன்னுத்துரை
[ஆசிரியர்]

(39411)

## திருமதி ருக்மணி வெற்றிவேற்பிள்ளை

மருதனார்மடத்தைச் சேர்ந்த திருமதி ருக்மணி வெற்றிவேற்பிள்ளை அவர்கள் (முன்னாள் தலைமை ஆசிரியை — இராமனாதன் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் பயிற்சிப் பாடசாலை, தலைவர் — இராமனாதன் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலை) 27 - 11 - 95 இல் காலமானார்.

அன்னார் காலம்சென்ற அ. வெற்றிவேற்பிள்ளையின் (தலைமையாசிரியர் H. B. E) அன்பு மனைவியும் V. கேதாரநாதன் L. R.C. P. (Lond) FRACS, FRCS (Eng) Cardio – Thoracic Surgeon, V. ஏகாம்பரநாதன் (ஆசிரியர் இராமனாதன் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரி, பேரின்பராணி (ஆசிரியை, மத்திய கல்லூரி, இணுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், K. செல்வநாயகி FRACP, K. இரவீந்திரன் (Engineer), E. தேவநேசன் (மாணவன், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), E. ஜெயமோகன், E. ஜெகதீசன் (மாணவன் பொறியியல்பீடம் பேராதனை), E. செந்தில்நாதன், E. ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற T. K. சிவஞானம் R. M. P (பரணி பாமசி), திருமதி P. ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின ஈமக்கிரியைகள் 28 - 11 - 95 அல்வாயில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோறம்

தகவல்:
வெ. ஏகாம்பரநாதன்
(மகன்)

மருதனார்மடம்
சுன்னாகம்.

மே/பா.
இரா. சோமசுந்தரம்,
கிராமசேவையாளர் அகம்.
அல்வாய் தெற்கு.

(39409)

★ புதிய கிளை நிறுவனம் ★
இ. சுப்பிரமணியம்
மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள்,
பாவனைப் பொருள்கள்
விற்பனை அகம்
இல. 8, காங்கேசன் நெடுஞ்சாலை, சுன்னாகம்.
இல. 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஆகிய முகவரிகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வந்த எமது வாணிப நிலையம் தனது புதிய கிளை நிறுவனத்தை
புதிய அங்காடிக் கட்டடம்
கொடிகாமத்தில் (கொடிகாமம் சந்தி)
27 - 11 - 1995 இல் ஆரம்பித்துள்ளதனை அன்புக்குரிய வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
உரிமையாளர்கள்
(39389)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 29-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org